PGIE
POST GRADUATE
INSTITUTE OF
ENGLISH

# ஆங்கிலத்துக்கான பட்டப்பின் நிறுவகம்

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்

## 2012

# ஆங்கிலத்துக்கான பட்டப்பின் நிறுவகம்
# வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்
# 2012

## உள்ளடக்கம்


**1. தரிசன நோக்கு**

**2. இலட்சிய நோக்கு**

**3. பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் பற்றிய சுருக்கமான விபரம்**

(அ) PGIE இன் உறுப்பினர்கள் -

(i) முகாமைத்துவ சபை

(ii) TESL தொடர்பான கல்விச் சபை

(iii) இலக்கியம் கற்பித்தலுக்கான கல்விச் சபை

**4. பணிப்பாளரின் மீளாய்வு**

(அ) சுருக்கமான அறிமுகம்

(ஆ) அடைவுகள்

(இ) தோல்விகளும் நியாயப்படுத்தலும்

(ஈ) எதிர்காலத் திட்டம்

**5. பணிப்பாளரின் அறிக்கை**

**6. திருத்தப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் (புதிய படிவத்தின்படி)**

**7. கணக்காய்வுக்குழுவின் அறிக்கை**

**8. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்கள்**

**9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

**10. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில**


## 1. தரிசன நோக்கு

தேசிய மற்றும் சர்வதேசிய செல்நெறிகளைக் கவனத்திற் கொண்டு, ஆக்கத்திறன் மற்றும் சூழ்நிலை சார்ந்த முனைப்புகளுக்குப் பெயர்பெற்று ஆங்கிலக் கற்கைகள், ஆங்கிலக் கல்வி ஆகியவற்றில் பட்டப்பின் கல்வி மற்றும் ஆய்வுகளுக்குத் தலைமை வகித்தல்.

## 2. இலட்சிய நோக்கு

பட்டப்பின் மட்டத்தில் ஆய்வுகள், ஆசிரியர் கல்வி, புத்தாக்கம், ஆங்கிலக் கற்கை மற்றும் இலக்கியத்தில் புலமைசார் உன்னதம் ஆகியவற்றுக்கான வாய்ப்புக்களை சுயவழிப்படுத்தல், சுயகற்றல் ஊடாக வழங்குதலும் தேசிய மட்டத்தில் ஆங்கிலக் கற்கைகளை நெறிப்படுத்தலும் வழிப்படுத்தலும்.

## 3. பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் பற்றிய சுருக்கமான விபரம்



## (அ) (i) PGIE முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள்

| பெயர் | | பதவி |
|---|---|---|
| 1. | பேராசிரியர் எம்.சந்திரசேகர | தலைவர், ஆங்கிலம் மீதான நிலையியற் குழு (14.06.2011 முதல்) |
| 2. | கலாநிதி எச்.ரத்வத்த | பதில் பணிப்பாளர், PGIE (01.01.2012 - 29.02.2012) பணிப்பாளர், PGIE (01.03.2012 முதல்) |
| 3. | கலாநிதி ஜே மனதுங்க | தலைவர் ELTC மொறட்டுவ பல்கலைக்கழகம் (UGC நியமனம்) |
| 4. | பேராசிரியர் ஜீ.டீ.லேகம்கே | பேராசிரியர் / இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித்துறை / கல்விப்பீடம், இ.தி.ப (இ.தி.ப மூதவை பிரதிநிதி) |
| 5. | பேராசிரியர் எஸ் வால்டர் பெரேரா | ஆங்கிலப் பேராசிரியர் ஆங்கிலத்துறை, பேராதனை பல்கலைக்கழகம் (UGC நியமனம்) |
| 6. | பேராசிரியர் நெலுக்கா சில்வா | தலைவர் / ஆங்கிலத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 7. | திருமதி எஸ்.சற்குணராஜா | தலைவர் / மொழியியல் மற்றும் ஆங்கில இலக்கியத்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம் |
| 8. | கலாநிதி டீ தேவேந்திர | தலைவர் / மொழி கற்கைத்துறை - இ.தி.ப |
| 9. | கலாநிதி எஸ்.ஜே.நவரத்ன | செயலாளர் / கல்வி அமைச்சு (01.08.2010 முதல்) |
| | திருமதி எஸ்.பீ.எம்.கே.சிறிவர்தன | தலைமைக் கணக்காளர், உயர்கல்வி அமைச்சு பிரதான கணக்காளர் / உயர் கல்வி அமைச்சு (செயலாளர் உயர்கல்வி அமைச்சின் பிரதிநிதி) (09.08.2011 முதல்) |
| 10. | பேராசிரியர் என்.ஆர்.அர்த்தநாயக்க | தகைசார் பேராசிரியர் - இ.தி.ப கவுன்சில் பிரதிநிதி (26.08.2011 முதல்) |
| 11. | கலாநிதி ஜீ.கொடித்துவக்கு | பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம், மொழிகள், மானிடவியல் சமூக விஞ்ஞானங்கள் பீடம், தே.க.நி (26.07.2011 முதல்) |
| 12. | பேராசிரியர் டபிள்யூ.ஐ.சிரிவீர | ஓய்வுபெற்ற பேராசிரியர், பேராதனை பல்கலைக்கழகம் (UGC நியமனம்) |
| 13. | கலாநிதி உபாலி சேதர | முன்னாள் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவனம், (UGC நியமனம்) |
| 14. | பேராசிரியர் நிலோபர் டி மெல் | பேராசிரியர் / ஆங்கில திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம் (UGC நியமனம்) |
| 15. | திருமதி எச்.எம்.என்.எஸ்.குணவர்தன | பணிப்பாளர் நாயகம், சட்ட விவகாரங்கள் திணைக்களம் (பொதுத் திறைசேரி) (பொதுத் திறைசேரியின் பிரதிநிதி) |

(ii) ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தலுக்கான PGIE இன் கல்விச் சபையின் உறுப்பினர்கள்

| பெயர் | | பதவி |
|---|---|---|
| 1. | கலாநிதி எச் ரத்வத்த | தலைவர், பதில் பணிப்பாளர் / PGIE (29.02.2012)<br>பணிப்பாளர் PGIE (01.03.2012 முதல்) |
| 2. | பேராசிரியர் எம் குணசேகர | ஆங்கிலப் பேராசிரியர், பீடாதிபதி, பட்டப் படிப்புகள் பீடம், களனி பல்கலைக்கழகம் |
| 3. | கலாநிதி ராதிகா டி சில்வா | சிரேஷ்ட விரிவுரையாளர், மொழிக் கற்கைத்துறை, OUSL |
| 4. | கலாநிதி வீ.வீ.<br>மெதவத்தேகெதர | சிரேஷ்ட விரிவுரையாளர், மொழிக் கற்கைத்துறை, OUSL |
| 5. | கலாநிதி<br>டபிள்யூ.எம்.செனவிரத்ன | நூலகர், OUSL (பதவி வழி உறுப்பினர்) |
| 6. | செல்வி எல்.கே.குமாரணதுங்க | வருகைதரு விரிவுரையாளர் - PGIE<br>முன்னாள் பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவனம் |
| 7. | செல்வி பீ.நாகசுந்தரம் | முன்னாள் தலைவர், ஆங்கிலத்துறைத் திணைக்களம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்<br>(வருகைதரு விரிவுரையாளர் - PGIE ) |
| 8. | செல்வி எச்.டீ.விஜேசேகர | மாணவர் பிரதிநிதி (26.05.2011 முதல்) |
| 9. | திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி | மாணவர் பிரதிநிதி (26.05.2011 முதல்) |

(iii) ஆங்கில இலக்கியம் கற்பித்தலுக்கான PGIE இன் கல்விச் சபையின் உறுப்பினர்கள்

| பெயர் | | பதவி |
|---|---|---|
| 1. | கலாநிதி எச் ரத்வத்த | தலைவர், பதில் பணிப்பாளர் / PGIE (28.02.2012 வரை) பணிப்பாளர் (01.03.2013 முதல்) |
| 2. | பேராசிரியர் நிலோபர் டி மெல் | பேராசிரியர் / ஆங்கில திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3. | பேராசிரியர் நெலுக்கா டி சில்வா | தலைவர், ஆங்கிலத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 4. | கலாநிதி மைத்திரி விக்கிரமசிங்க | ஆங்கிலப் பேராசிரியர் / ஆங்கிலத்துறை, களனி பல்கலைக்கழகம் |
| 5. | கலாநிதி டினாலி தேவேந்திர | தலைவர், மொழிக் கற்கைத்துறை இ.திப. |
| 6. | கலாநிதி கே.வர்ணபால | சிரேஷ்ட விரிவுரையாளர் / மொழிக் கற்கைத்துறை இ.திப. |
| 7. | கலாநிதி லக்ஷ்மி டி சில்வா | முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கிலத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம், |
| 8. | கலாநிதி டபிள்யூ.எம்.செனவிரத்ன | நூலகர், OUSL (பதவி வழி உறுப்பினர்) |

## 4. பணிப்பாளரின் மீளாய்வு

### (அ) சுருக்கமான அறிமுகம்

PGIE ஆனது, நீண்டகாலமாக திறந்த பல்கலைக்கழகத்தின் பகுதி நேர ஆளணியினரைக் கொண்டுதான் நடத்தப்பட்டு வந்தது. ஆனால், 2012 இரண்டாம் காலாண்டு முதல், முழு நிர்வாக ஆளணியினரும், நிரந்தரமாக நியமிக்கப்பட்டனர். இவ்வாறு நிரந்தர ஆளணியினர் நியமிக்கப்பட்டதன் காரணமாக, எதிர்கால அபிவிருத்திக்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. 2013 - 2017 காலத்திற்கான பெருந்திட்டம், மூலோபாயத் திட்டம் மற்றும் PGIE கட்டிடத்திற்கான முன்மொழிவு ஆகியவை தயாரிக்கப்பட்டன.

2012 ஜுன் மாதம் கணக்குப் பதிவாளர் மற்றும் கணனி உதவியாளர் ஆகிய ஆளணி பதவிகளும் நிரப்பப்பட்டன.

2012 ஜுன் 22 ஆம் திகதி PGIE ஆனது COPE க்கு வருமாறு பணிக்கப்பட்டது.

MA TESL தொடர்பான கல்விசார் செயற்பாடுகள் கற்பித்தல், மேற்பார்வை, புள்ளியிடல் மற்றும் மதிப்பீடு ஆகியவை, நிரந்தர கல்விசார் ஆளணியின்மையின் காரணமாக, வருகைதரு விரிவுரையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாம் மொழிச் சூழலில் இலக்கியம் கற்பித்தலில் பட்டப்பின் டிப்ளோமா மற்றும் இலக்கியம் கற்பித்தலில் முதுமாணிப் பட்டம் ஆகியவை தொடர்பான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அத்துடன், க.பொ.த (உயர்தர) வகுப்பக்களில் கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்காக விமர்சன இலக்கிய வாசிப்புத் திறன்கள் மீதான ஒரு குறுங்கால கற்கை நெறியும் PGIE யினால் வழங்கப்பட்டது.

கல்வியாளர்கள், நிர்வாகிகள், கல்விசார் ஆளணியினரின் வெவ்வேறு தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, PGIE யின் 2012 ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகள் தாமதமாகின. மொத்தமாக 89 நாட்கள் PGIE தனது பூரண இயலளவுடன் பணிபுரியக்கூடவில்லை

அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய முக்கிய அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஆங்கில ஆசிரியர்களை வலுப்படுத்துகின்ற தனது முதல்நிலை இலக்கினை அடைவதில் PGIE தொடர்ந்து பணிபுரிந்தது. PGIE மாணவர்கள் இன்று கொழும்பு, யாழ்ப்பாணம், ஜயவர்தனபுர, சப்ரகமுவ, மொறட்டுவை, பேராதனை, வயம்ப ஆகிய பல்கலைக்கழங்கள், திறந்த பல்கலைக்கழகம் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும், தனியார் உயர்கல்வி நிறுவனங்களிலும் தற்போது பணிபுரிகின்றனர். தேசிய கல்வியியல் கல்லூரிகளைச் சேர்ந்த எமது மாணவர்களான ஆசிரிய கல்வியாளர்கள் இருவர் தற்போது தமது ஆய்வினைத் தொடங்கியுள்ளனர்.

தனது குறுங்கால கற்கைநெறிகள் மூலம் தற்போது PGIE ஆங்கில ஆசிரியர்களின் தொடருறு தொழில்சார் விருத்தி செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

**(ஆ) அடைவுகள்**

- பணிப்பாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், உதவி நிதியாளர் ஆகிய PGIE யின் முந்திய பதவிகள் நிரப்பப்பட்டன. பணிப்பாளர் பதவி, 01.03.2012 இலும், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பதவி 16.04.2012 இலும் (ஒரு வருடம் நான்கு மாத இடைவெளிக்குப் பின்னர்) உதவி நிதியாளர் பதவி 01.05.2012 இலும் (ஒரு வருடம் இரண்டு மாதங்களுக்கு பின்னர்) நிரப்பப்பட்டன.
- 2012 இல் முழுநேர நிர்வாக ஆளணியினரின் உதவியுடன் PGIE தனது எதிர்கால முன்னேற்றத்தைத் திட்டமிட்டு தனது இலக்குகளை அடையக்கூடிய மூலோபாயங்களை விருத்தி செய்தது.

- 2013 - 2017 பெருந்திட்டமும், மூலோபாயத் திட்டமும் தயாரிக்கப்பட்டு UGC மற்றும் MOHE க்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- தனது இலக்குகளை அடையக்கூடிய வகையில் பல்வேறு வசதிகளும் கொண்டதாக PGIE ஒரு முன்மொழிவைத் தயாரித்தது. இந்தத் திட்டம் தற்போது UGC யினால் அங்கீகரிக்கப்பட்டு MOHE க்கு அனுப்பப்பட்டுள்ளது.

- கல்விசாரா ஊழியரின் வேலை நிறுத்தத்தின் போது, PGIE ஐ COPE வருமாறு பணித்தது. இத்தருணத்தில் நீர் மற்றும் மின்சார வசதிகள் இருக்கவில்லை. ஆவணங்களைத் தேடுவதும் பிரதி பண்ணுவதும் சிரமமாக இருந்தது. எனினும், புதிய நிர்வாக ஊழியர் ஒரு குழுவாகச் செயற்பட்டு, அறைகூவல்களை வெற்றிகரமாக சமாளித்தனர்.

- 2012 ஜுன் மாதத்தில் கணக்குப் பதிவாளர் மற்றும் கணனி உதவியாளர் ஆகிய ஆளணி பதவிகள் PGIE யில் நிரப்பப்பட்டன. இப்பதவிகளை நிரப்புவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- 2012 இல் 06 மாணவர்கள் MD TESL கற்கை நெறியைப் பூர்த்தி செய்தனர். முன்னைய வருடங்களைப் போலவே எமது மாணவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் வெளிவாரி பரீட்சகர்களினால் பாராட்டப்பட்டன. வருட இறுதியில் 09 மாணவர்கள் தமது ஆய்வு முன்மொழிவுகளை வெற்றிகரமாக சமர்ப்பித்து, தமது ஆய்வுகளை தொடங்கினர். இவர்களில் வெளிநாட்டுக்குக் குடிபெயர்ந்த இரண்டு மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளையும், ஆய்வுகளையும் ஒன்லைன் மற்றும் ஸ்கைப் உதவியுடனும் PGIE இன் மேற்பார்வையாளருடனும் தொடர்கின்றனர். இதன்மூலம் PGIE ஆனது, மாணவர்கள் தமது சொந்த நேரத்தில், சொந்த வழிமுறையில் தூரத்திலிருந்து கற்கும் திறந்த தொலைக்கல்வியின் இலக்குகளைப் பூர்த்தி செய்துள்ளது.

- 2012 மே மாதத்தில் PGIE தனது பட்டப்பின் டிப்ளோமா (TESL) வுக்கான விண்ணப்பங்களைக் கோரியது. கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்ந்த போதும், 108 விண்ணப்பப் படிவங்கள் விற்பனை செய்யப்பட்டன. எனினும், 54 விண்ணப்பதரிகளே கற்கை

நெறியில் சேர்வதற்கான தகைமையைப் பெற்றனர். கடந்த வருடங்களைப் போலவே தேர்வு நாடிகளின் விடய அறிவு, சிந்தனைத்திறன் மற்றும் ஆங்கில மொழித்திறன் மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்பட்டது. புதிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு 38 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். கடந்த வருடத்தில் தமது கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 45 மாணவர்கள் MA TESL இல் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

- PGIE ஆனது, இரண்டாம் மொழிச் சூழலில் இலக்கியம் கற்பித்தலில் பட்டப்பின் டிப்ளோமா மற்றும் முதுமாணிப் பட்டம் ஆகிய இரண்டு கற்கை நெறிகளை விருத்தி செய்துள்ளது. இந்தக் கற்கை நெறியானது, இலங்கையில் முதன் முறையாக உருவாக்கப்பட்டது. இது இரண்டாம் மொழிச் சூழலில் இலக்கியம் கற்றலில் இருந்து விலகி, அதனைக் கற்பிப்பதில் குவிமையம் கொண்டுள்ளது. இதன் மூலம் ஆங்கில ஆசிரியர்களுக்கு இலக்கியம் கற்பிக்கும் திறன் மேம்படுத்தப்படும். இதற்கான அனுமதி PGIE யின் கல்விச் சபை மற்றும் முகாமைச் சபை ஆகியவற்றில் பெறப்பட்டு, ஜுன் மாதம் பல்கலைக்கழகப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், ஜுன் -செப்டம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிமிர்த்தம் காரணமாக, ஒக்டோபர் மாத பேரவைக் கூட்டத்திலேயே இது எடுக்கப்பட்டது.

- PGIE ஆனது, தேவைகள் பகுப்பாய்வு ஒன்றினை மேற்கொண்டு, அதனடிப்படையில் உயர்தர வகுப்புக்களில் படிப்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு விமர்சன இலக்கிய வாசிப்புத் திறன்கள் மீதான குறுங்கால கற்கை நெறியை நடத்தியது. 13 மாணவர்கள் இதனை பூரணப்படுத்தினர். பெற்றுக்கொண்ட பின்னூட்டலின் அடிப்படையில் இக்கற்கை நெறி திருத்தப்பட்டு, அடுத்த வருடம் வழங்கப்படும். மாணவர்களின் பின்னூட்டல் மற்றும் தேவைகள், பகுப்பாய்வு ஆகியவற்றின் அடிப்படையில் வேறு விடயங்களிலும் குறுங்கால தொழில்சார் பயிற்சி அவசரமாகத் தேவைப்படுகின்றது என்பது தெரிய வந்துள்ளது.

- பட்டப்பின் டிப்ளோமா, முதுமாணிப் பட்டம் மற்றும் குறுங்காலக் கற்கை நெறிகளில் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதால் நிறுவனத்தின் நிதி நிலைமை மேம்பட்டுள்ளது.

- MA TESL நிகழ்சித் திட்டத்தின் மூன்று கற்கை நெறிகளின் (ஆய்வு தொடர்பாடல் (ELP 2102), ஆய்வு முறைகள் மற்றும் வடிவம் (ELP 2101) கலைத்திட்டம் மற்றும் பாட வடிவமைப்பு ELP 1102) பாடத்திட்டம், உள்ளடக்கம், முறையியல் ஆகியவற்றில் மீட்டல் செயற்பாடுகள் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- TESL பட்டப்பின் டிப்ளோமாவின் கற்பித்தல் செயலாய்வுக் கோவை (ELP 1302) இன் இறுதி மதிப்பீட்டுப் பொறிமுறை 2012 இல் இலங்கை திறந்த பல்கலைக்கழக பேரவையினால் அனுமதிக்கப்பட்டு, கற்கை நெறி பாடத்தை எழுதும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**மாணவர் அந்தஸ்து**

2012 இல் 08 மாணவர்களில் 06 பேர் தமது MA TESL இன் ஆய்வினை பூரணப்படுத்தி பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். உடல்நலக் குறைவு மற்றும் தமது வேலைச்சுமை காரணமாக மற்றைய இருவரும் பூரணப்படுத்தக் கூடவில்லை. கற்கை நெறியைப் பூரணப்படுத்திய 09 மாணவர்கள் தமது ஆய்வினை தொடங்கியுள்ளனர். இவர்களில் இருவர் தற்போது கனடாவில் உள்ளனர்.

TESL இல் பட்டப்பின் டிப்ளோமாவில் புதிதாக 38 மாணவர்கள் பதிவுசெய்து கொண்டனர். MA TESL பகுதி I ஐ பூர்த்தி செய்த 45 மாணவர்கள் மீள் பதிவு செய்தனர். விமர்சன இலக்கிய வாசிப்பு, திறன்கள் குறுங்கால கற்கை நெறியை 13 மாணவர்கள் பூர்த்தி செய்தனர்.

### (இ) தோல்விகளும் நியாயப்பாடுகளும்

2012 இல் மூன்று வெவ்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக, பல்வேறு வழிகளில் PGIE இன் செயற்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. கல்விசாரா ஊழியர்கள் ஜுன் 05 - 27 வரை வேலைநிறுத்தம் செய்தமையின் காரணமாக, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் PGIE தமது பணிகளை முன்னெடுக்க முடியவில்லை. துறைத் தலைவர்கள் தமது பதவியினை இராஜினாமாச் செய்தமையினால், PGIE தமது கோரிக்கைகளுக்கு உதாரணமாக இரண்டாம் மொழிகளில் இலக்கியம் கற்பித்தலில் டிப்ளோமா மற்றும் முதுமாணிப் பட்டங்களுக்கான மூதவை அங்கீகாரத்தைப் பெற முடியவில்லை. அத்துடன் 2012 இல் கல்விசார் ஆளணியினரின் வேலைநிறுத்தம் காரணமாக, டிப்ளோமா / MA TESL நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பரீட்சை மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் ஆகியவற்றைக் கொண்டு நடத்தக்கூடவில்லை.

TESL பட்டப்பின் டிப்ளோமா மற்றும் விமர்சன இலக்கிய வாசிப்புத் திறன் மீதான குறுங்கால நெறி மீதான விண்ணப்பங்களை வழங்குதல், கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டது. கல்விசார் ஆளணியின் வேலைநிறுத்தம் காரணமாக, குறுங்கால கற்கை நெறியின் ஆரம்பம் பிற்போடப்பட்டது.

2012 இல் PGIE இன் கல்விசார் ஆளணியினரை நியமிக்க முடியாமையினாலும், PGIE இன் பணிகள் பாதிக்கப்பட்டன. உயர் பட்டப் படிப்புக்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்பார்வை செய்யும் குறிப்பிடத்தக்க அனுபவம் கொண்ட தேர்வுநாடி முகாமைச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட போதும், தகைமை அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்டது. எனினும், இதே தேர்வுநாடி இதே தகைமைகளுடன் களனி பல்கலைக்கழகத்தினால் நியமிக்கப்பட்டார். இவ்வாறு PGIE க்கு பெரும் சேவை செய்திருக்கக்கூடிய ஒரு சிரேஷ்ட விரிவுரையாளரை நாம் இழக்க வேண்டி ஏற்பட்டது. இதே பதவிக்கு பின்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போது, தகுதிவாய்ந்தவரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை.

2012 ஜுலையில் இப்பதவிக்காக மூன்றாம் முறை விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

பணிப்பாளர் மற்றும் இடம் தொடர்பான பிரச்சினை தொடர்வதால் PGIE இல் விரிவாக்கமும், அபிவிருத்தியும் பாதிக்கப்பட்டுள்ளன. அடுத்து வரும் மேலதிக பணியாளர் நியமிக்கப்படவிருப்பதால் இடப்பிரச்சினை இன்னும் கடுமையாகலாம்.

**(ஈ) எதிர்காலத் திட்டம்**

1. இரண்டாம் மொழிச் சூழலில் இலக்கியம் கற்பித்தலில் டிப்ளோமா தொடர்பான அனுமதியை இலங்கை திறந்த பல்கலைக்கழக மூதவை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் இருந்து பெறுதல்.

2. இரண்டாம் மொழிச் சூழலில் இலக்கியம் கற்பித்தலில் முதுமாணிப் பட்டம் தொடர்பான அனுமதியை இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் இருந்து பெறுதல்.

3. மேற்படி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒழுங்குகளை தயாரித்து சம்பந்தப்பட்ட அமைப்புகளிடம் இருந்து அனுமதி பெறுதல்.

4. மேற்படி கற்கை நெறிகளுக்கான கற்பித்தல் சாதனங்களை (அச்சு, வீடியோ, வழிவரு) தயாரித்தல்.

5. PGIE இல் தத்துவ முதுமாணி, கலாநிதி பட்டங்களைத் தொடங்குவது தொடர்பான கருத்துருவாக்கம் மற்றும் அது தொடர்பாக ஐந்து அமைப்புகளிடம் (கல்விச் சபை, முகாமைச் சபை, பேரவை, மூதவை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு) அனுமதி பெறுதல்.

6. விமர்சன இலக்கிய வாசிப்பு, குறுங்கால கற்கை நெறியை சந்தை தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்தல்.

7. பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஏனைய தொழில் புரியும் பட்டதாரிகளுக்கு பொருத்தமான வான்மை விருத்தி கற்கை நெறிகளை உருவாக்கி நடத்துதல்.

8. தேசிய அமைப்புகள் மற்றும் அமைச்சரவையிடமிருந்து அனுமதி பெறுகைக்காக முன்மொழியப்பட்டுள்ள PGIE கட்டடம் தொடர்பான பணிகளை முன்மொழிதல்.

9. PGIE கட்டிட நிர்மாணத்திற்கான ஆரம்ப பணிகளை முன்னெடுத்தல்.

10. கல்விசார் ஆளணியினரை நியமித்தல்

11. கல்விசாரா ஆளணியினரை நியமித்தல்

**(உ) வளங்கள் மற்றும் மாணவர் விபரங்கள்**

| நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டம் | மொத்த மாணவர்கள் | | மொத்த கல்விசார் ஆளணியினர் | | மொத்த கல்விசாரா ஆளணியினர் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2011 | 2012 | 2011 | 2012 | 2011 | 2012 |
| ஆங்கிலத் திற்கான பட்டப்பின் நிறுவகம் (PGIE) | TESL முதுமாணி | 37 | 30 | | | | |
| | TESL இல் முதுமாணி / பட்டப்பின் டிப்ளோமா | 25 | 53 (38+15) | 01 | 01 | 03 | 03 |
| **மொத்தம்** | **02** | **62** | **83** | **01** | **01** | **03** | **03** |

**(ஊ) உள்ளூர் மாணவர்கள் பற்றிய விபரங்கள்)**

| நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டம் | மொழி மூலம் | பட்டப்பின் டிப்ளோமா உள் கொடுப்பு | MA TESL | ஆண்டு 1 மாவணர்கள் (பகுதி I) | ஆண்டு 2 மாவணர்கள் (பகுதி II) | பட்டம் பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|
| PGIE | MA in TESL | ஆங்கிலம் | - | 30 | 11 | 19 | 06 |
| | பட்டப்பின் டிப்ளோமா /முதுமாணி TESL | ஆங்கிலம் | 38 | - | 52 | 01 | - |
| **மொத்தம்** | | | **38** | **25** | **63** | **20** | **06** |

**(எ) கல்விசார் ஆளணி விபரங்கள்**

| நிறுவனம் | பாடம் | மொழி மூலம் | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் | உதவி விரிவுரையாளர் | போதனாசிரியர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| PGIE | | ஆங்கிலம் | - | - | 01 | - | - | - |
| **மொத்தம்** | | **-** | **-** | **-** | **01** | **-** | **-** | **-** |

**(ஏ) கல்விசாரா ஆளணி விபரங்கள்**

| நிறுவனம் | அதி சிரேஷ்ட ஆளணி | சிரேஷ்ட ஆளணி | கனிட்ட ஆளணி | சிற்றூழியர் |
|---|---|---|---|---|
| PGIE | - | - | 02 | 01 |
| மொத்தம் | - | - | 02 | 01 |

**(ஐ) ஆய்வு, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள்**

| பாடம் | வெளியீடு | விற்பனை | சமர்ப்பிக்கப்பட்டது |
|---|---|---|---|
| அ. ஆய்வுகளின் எண்ணிக்கை | - | - | 07 |
| ஆ. புத்தாக்க எண்ணிக்கை | - | - | - |
| இ. ஆய்வு சஞ்சிகை எண்ணிக்கை | 01 | - | - |
| ஈ. புத்தகங்களின் எண்ணிக்கை | - | - | - |
| உ. கட்டுரைகளின் எண்ணிக்கை | 04 | - | - |
| ஊ. ஏனைய | - | - | - |

**(ஓ) நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள்**

| பாடம் | சமூகமளித்தல் | பூரணப்படுத்தல் | நடத்துதல் |
|---|---|---|---|
| அ. பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | - | - | 01 |
| ஆ. பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் | - | - | 01 |
| இ. பட்ட நிகழ்ச்சித் திட்டம் | - | - | - |
| ஈ. டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் | - | - | - |
| உ. சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம் | - | - | - |
| ஊ. ஏனைய | - | - | - |
| மொத்தம் | - | - | 02 |

**(ஓ) புதிய நிகழ்ச்சித் திட்டங்கள்**

| நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டம் | மொழி மூலம் | சான்றிதழ் | டிப்ளோமா | பட்டப்பின் டிப்ளோமா | முதுமாணி | முது தத்துவமாணி | கலாநிதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| PGIE | பட்டப் பின் டிப்ளோமா TESL | ஆங்கிலம் | - | - | பட்டப்பின் டிப்ளோமா | - | - | - |
| | விமர்சன இலக்கிய வாசிப்பு மீதான பட்டப்பின் டிப்ளோமா | ஆங்கிலம் | பட்டப் பின் சான்றிதழ் மட்டம் | | | | | |

**(ஔ) இந்த அறிக்கைக்குப் பொருத்தமான வேறு ஏதேனும் விபரங்கள்/செயலாற்றுகை**

வெளிநாட்டில் இருக்கும் மாணவர்கள் தமது முன்மொழிவுகளை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வருடாந்த ஆய்வு மன்றத்தில் சமர்ப்பித்தனர். இந்த ஏற்பாடுகள் வெளிநாட்டில் வாழ்கின்ற அல்லது குடிபெயர்கின்ற மாணவர்களுக்கு வசதியாக இருந்த காரணத்தினால், PGIE யின் புதிய கட்டிடத்தில் இதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

PGIE ஆனது சட்டத்தில் 2011 ஆகஸ்ட் மாதத்தில் தான் முன்வைத்த திருத்தங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை எதிர்பார்த்துள்ளது.

PGIE ஆனது பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற முக்கிய நிர்வாகத் தீர்மானங்களில் பங்குகொள்ள முடியாது. இதனால், மேற்படி தீர்மானங்களை தெரிந்து கொள்வதில் ஏற்படுகின்ற தாமதங்கள் PGIE யின் செயற்பாடுகளைக் கடுமையாகப் பாதிக்கின்றது. உதாரணமாக, 2012 இல் வகுப்பறை, பரீட்சை மண்டபங்கள், நூலக அங்கத்துவம் ஆகியவற்றை ஒதுக்கீடு செய்வதில் மேற்கொண்ட தீர்மானங்கள் PGIE யின் தொழிற்பாடுகளைப் பாதித்தன. பட்டப் பின் டிப்ளோமா / MA TESL ஆகியவை தொடர்பான 2011 / 12 க்குரிய பிரவேசப் பரீட்சைகள் கல்விசார் ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக 27.07.2012 இல் தேசிய கல்வி நிறுவகத்தில் நடத்தப்பட்டது.

## 05. பணிப்பாளரின் அறிக்கை

2012 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் அளவில் PGIE யின் பணிப்பாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மற்றும் உதவி நிதியாளர் ஆகிய பதவிகள் நிரப்பப்பட்டன. இவ்வருடத்தில் PGIE ஆனது பின்வரும் செயற்பாடுகளை பூரணப்படுத்தியது.

**கல்விசார் முன்னேற்றம்**

(அ) இரண்டாம் மொழிச் சூழலில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பான பட்டப் பின் டிப்ளோமா முன்மொழிவு தயாரிக்கப்பட்டதோடு, PGIE யின் கல்விச் சபை, முகாமைச் சபை மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழக பேரவை ஆகியவற்றின் அங்கீகாரமும் பெறப்பட்டது.

(ஆ) இரண்டாம் மொழிச் சூழலில், இலக்கியம் கற்பித்தல் தொடர்பான முதுமானிப் பட்டம் முன்மொழிவு தயாரிக்கப்பட்டதோடு, PGIE யின் கல்விச் சபை, முகாமைச் சபை மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழக பேரவை ஆகியவற்றின் அங்கீகாரமும் பெறப்பட்டது.

(இ) TESL பட்டப் பின் டிப்ளோமாவுக்கு 38 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். முன்னைய வருடங்களைப் போலவே 96 மாணவர்கள் பிரவேசப் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்கள் யாவரும் பட்டதாரிகள் என்ற போதிலும், பாட அறிவின்மை, மொழித் தேர்ச்சியின்மை மற்றும் விமர்சன சிந்தனைத்திறன் இன்மை காரணமாக பரீட்சையில் அவர்களது அடைவுகள் திருப்திகரமாக இருக்கவில்லை.

(ஈ) வருடாந்த ஆய்வு மன்றம் நடத்தப்பட்டது. இதில் 9 மாணவர்கள் தமது ஆய்வு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தனர். இவர்களில் ஒருவர் கனடாவில் இருந்து தனது முன்மொழிவைச் சமர்ப்பித்தார். இதன்மூலம் எதிர்காலத்தில் PGIE கட்டப்படும் பொழுது புதிய தொழில்நுட்ப வசதிகள் கட்டமைக்கப்பட வேண்டும் என்பது புலனாகிறது.

(உ) MA TESL பகுதி I ஐப் பூர்த்தி செய்த 45 மாணவர்கள் மீள் பதிவு செய்யப்பட்டனர்.

(ஊ) TESL டிப்ளோமாவில் மூன்று கற்கை நெறிகளை (ஆய்வுமுறை, ஆய்வு தொடர்பாடல், கலைத்திட்டம் மற்றும் சாதனங்களின் வடிவமைப்பு) இற்றைப்படுத்தி உள்ளடக்கத்தையும், பாடத்திட்டத்தையும் திருத்தும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

(எ) 'செயலடைவுக் கோவையை எவ்வாறு அணுகலாம்?' என்னும் பாடம் எழுதுவது தொடங்கப்பட்டது.

(ஏ) MA TESL மாணவர்கள் ஆறு (06) பேர் பட்டமளிப்புக்கு அனுப்பப்பட்டனர்.

(ஐ) 15 MA TESL மாணவர்களின் ஆய்வுகள் மேற்பார்வை செய்யப்பட்டன. எனினும், பிரயோக மொழியியலில் திறமையுள்ள சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இல்லாமையினால் MA TESL மாணவர்களின் ஆய்வுகளை மேற்பார்வை செய்யும் பணி பணிப்பாளர் மற்றும் மொழிகள் கற்கைகள் துறையின் மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்கள் தலைமையில் சுமத்தப்பட்டுள்ளது. இவர்கள் தமது துறையில் உள்ள வழமையான கல்விசார் மற்றும் நிர்வாகப் பணிகளுக்கு மேலதிகமாக ஆய்வு மேற்பார்வைக்காக நிறைய நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது.

**முகாமைத்துவம் மற்றும் நிர்வாக முன்னேற்றம்**

(அ) 2013-17 PGIE முழுமையான திட்டம் தயாரிக்கப்பட்டது.

(ஆ) 2013-17 PGIE மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

(இ) 2013-17 PGIE பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டது.

(ஈ) முன்மொழியப்பட்டுள்ள PGIE கட்டிடத்திற்கான திட்டமும் மதிப்பீட்டு ஐந்தொகையும் தயாரிக்கப்பட்டன. மேற்படி முன்மொழிவு உயர்கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக

மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டது.

(உ) 2010-11 ஆண்டறிக்கை தமிழ், சிங்களம் ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டது.

(ஊ) PGIE யின் சிரேஷ்ட ஆளணியினருக்கு அறிமுக அட்டைகள் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டன.

(எ) PGIE பரீட்சைத் தாள்கள் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டன.

(ஏ) உபகரணங்கள் (போட்டோ பிரதி இயந்திரம், UPS முதலிய) கொள்வனவு செய்யப்பட்டன.

**மாணவர் செயலாற்றுகை 2011/12**

அட்டவணை 1 இறுதி மதிப்பீட்டில் மாணவர் செயலாற்றுகை 2011/12

| | ELM 1301 | ELM 1201 | ELM 1202 | ELM 1203 | ELM 1101 | ELM 1102 | ELM 1104 | ELM 2101 | ELM 2102 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தோற்றியோர் | 10 | 12 | 10 | 14 | 15 | 16 | 14 | 10 | 10 |
| சித்தி | 10 | 12 | 10 | 14 | 15 | 16 | 14 | 08 | 10 |
| சித்தியின்மை | 0 (0%) | 0 (0%) | 0 (0%) | 0 (0%) | 0 (0%) | 0 (0%) | 0 (0%) | 0 (20%) | 0 (0%) |

**ஆய்வு**

2012 மார்ச் மாதம் PGIE வருடாந்த ஆய்வு மன்றம் நடத்தப்பட்டது. இதில் மாணவர்கள் தமது ஆய்வுகளைச் சமர்ப்பித்தனர். ஒரு மாணவர் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கனடாவில் இருந்து தனது ஆய்வினைச் சமர்ப்பித்தார்.

இலங்கை பாடசாலைகளில் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்களின் தேவைகள் குறித்து PGIE ஓர் ஆய்வினை மேற்கொண்டது. இந்த ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், விமர்சன இலக்கிய வாசிப்பு குறுங்காலக் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன்,

இலக்கியம் கற்பித்தலில் பட்டப் பின் டிப்ளோமா மற்றும் முதுமானி நிகழ்ச்சித் திட்டங்களின் கலைத் திட்டம் மேற்படி ஆய்வின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன.

இவ்வருடத்தில் இலங்கையில் ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பான ஆய்வுத் தொகுதிக்கு PGIE பங்களிப்பு வழங்குகிறது. மேற்படி ஆய்வுகள் இதுவரை ஆய்வு செய்யப்படாத ஆய்வுகளில் மேற்கொள்ளப்பட்டோடு, இந்த ஆய்வுகளின் தரம் பற்றியும், இலங்கையில் ஆங்கிலம் கற்பித்தலில் அவற்றின் முக்கியத்துவம் பற்றியும், வெளிவாரி பரீட்சகர்கள் விதந்துரைத்துள்ளனர். இவ்வாய்வுகளை வெளியிடும் முயற்சிகளில் PGIE ஈடுபடவுள்ளது.

## புதிய நிகழ்ச்சித் திட்டங்களும் கற்கை நெறிகளும்

இரண்டாம் மொழிச் சூழலில் இலக்கியம் கற்பித்தலில் பட்டப் பின் டிப்ளோமா மற்றும் முதுமானிப் பட்டம் வழங்குதல் தொடர்பான முன்மொழிவு விருத்தி செய்யப்பட்டுள்ளது.

விமர்சன இலக்கிய வாசிப்பு குறுங்கால கற்கைநெறி தொடர்பான பாடத்திட்டம், உள்ளடக்கம் மற்றும் கற்பித்தல் சாதனங்கள் தயாரிக்கப்பட்டன.

ஆய்வு முறை மற்றும் ஆய்வு தொடர்பாடல் மீதான பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் சாதனங்களை திருத்தி இற்றைப்படுத்தும் செயற்பாடுகள் தொடங்கப்பட்டன.

அண்மையில் அங்கீகரிக்கப்பட்ட செயலடைவுக் கோவை தொடர்பாக கற்றல் சாதனங்களை தயாரித்தல் தொடங்கப்படவுள்ளது.

**ஆளணி**

2012 இல் PGIE இன் முக்கிய பதவி நிலைகளுக்கு நிரந்தர பணியாளர் நியமிக்கப்பட்டனர். 2012 மார்ச் 01 முதல் பணிப்பாளர், 2012 ஏப்ரல் 16 ஆம் திகதி முதல் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், 2012 ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் உதவி நிதியாளர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டனர். இதற்கு முன்னர் இப்பதவிகளுக்குரிய பணிகள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பணியாளர்களினால் பகுதிநேரமாக மேற்கொள்ளப்பட்டன.

PGIE யின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக இலங்கை திறந்த பல்கலைக்கழக மூதவையினால் 2011 இல் விசேட குழு அமைக்கப்பட்டது. இக்குழு முக்கியமாக சுட்டிக்காட்டிய விடயம் ஆளணி பற்றிய குறையாகும். 2012 இல் கணனி உதவியாளர் மற்றும் கணக்குப் பதிவாளர் பதவிகள் வழங்கப்பட்டன. இத்தகைய இப்பதவிகளை நிரப்பும் செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. பல்கலைக்கழக முறைமைக்குள் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பொருத்தமான நபர் கிடைக்காமையின் காரணமாக இப்பதவி விளம்பரப்படுத்தப்பட்டது. இதன்படி 204 பேர் விண்ணப்பித்தனர். இவர்களில் 64 பேர் பரீட்சை எழுதிய போதும் நிலையான செயன்முறை காரணமாக 2012 இல் இப்பதவியை நிரப்ப முடியவில்லை.

கணனி உதவியாளரை நியமிப்பதற்காக PGIE உயர்கல்வி அமைச்சில் இருந்து இரு பட்டியல்களைக் கோரவேண்டி இருந்தது. இந்தச் செயன்முறையின் தாமதம் காரணமாக இந்தப் பதவியையும் 2012 இல் நிரப்ப முடியவில்லை.

கல்விசார் பதவி அணியை நிரப்புவதற்காக தரம் II சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவு செய்யப்பட்டு, அவரது பெயர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு 2011 டிசம்பரில் அனுப்பப்பட்டது. எனினும், இவர் நியமன விதிகளுக்கு ஏற்றதாக நியமிக்கப்படவில்லை என 2012 மார்ச் மாதம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்தது. எனவே, முகாமை கலை இப்பதவிக்கு மீள் விளம்பரம் செய்யத் தீர்மானித்தது. மே 2012 இல் விளம்பரப்படுத்தப்பட்டது. எனினும், பொருத்தமான விண்ணப்பதாரிகள் இல்லாமையினால் ஜுலை 2012 இல் மீள் விளம்பரம் செய்யப்பட்டது.

நவம்பர் 2012 இல் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு டிசம்பரில் மேற்படி இரு பதவிகளும் நிரப்பப்பட்டன.

**கற்போருக்கான உதவி**

இலங்கை திறந்த பல்கலைக்கழக நூலகம் எமது பட்டப் பின் டிப்ளோமா மற்றும் முதுமானி மாணவர்களுக்கு தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருகிறது. அத்துடன், PGIE யின் கல்விசார் வளங்களின் கருவூலமாகவும் விளங்குகிறது. இலங்கை திறந்த பல்கலைக்கழக நூலகர் PGIE யின் கல்விச் சபையின் உறுப்பினராக உள்ளார்.

**கல்விசார் பணியாளர்களின் பங்களிப்பு**

**கலாநிதி ஹேமமாலா ரத்வத்த - பணிப்பாளர்**

- Asia TEFL சபையின் நிர்வாக சபை உறுப்பினர்
- Asia TEFL ஆய்வுச் சஞ்சிகையின் ஆசிரியர் - ஆலோசக சபை உறுப்பினர்
- Asia TEFL இன் நாடு சார் உறுப்பினர்
- ஆசிரியர் ஆலோசக சபையின் உறுப்பினர்
- Asia TEFL ஆய்வுச் சஞ்சிகை, சியோல், கொரியா கல்விசார் மீளாய்வாளர் - பன்முறை விடயங்களுக்கான ஆய்வுச் சஞ்சிகை
- பிரதம ஆசிரியர், VISTA ஆய்வு சஞ்சிகை, மானிடவியல் மற்றும் சமூக கற்கைகள் பீடம்.
- உறுப்பினர் - OUSL தர உறுதிப்பாட்டுக் குழு
- வளவாளர் (முன்னாள் தலைவர்) SLE LTA (இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கம்)
- மீளாய்வாளர் - இருமொழி ஆசிரியர்களுக்கான வளங்கள் தேசிய கல்வி நிறுவகம், இலங்கை
- மதிப்பீட்டாளர், இரு மொழி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் வளங்கள் - தேசிய கல்வி நிறுவகம்
- வளவாளர், பிரிவெனா இரு கல்வியின் எண்ணக்கரு சட்டக விருத்தி – 2012

- வளவாளர் இருமொழிக் கல்விக்கான மூலோபாய அறிக்கையை தயாரிப்பதற்கான செயலமர்வு, கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகம்
- வளவாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பணியாளர் விருத்தி நிலையம் - ஆய்வு எழுத்துத் திறன்கள்
- மீளாய்வாளர், களனி பல்கலைக்கழக பட்டப் படிப்புகள் பீடத்தின் ஆய்வுக் கட்டுரைகள்
- கைப்பிரதி மீளாய்வாளர், ஆங்கிலக் கற்கைகள் தொடர்பாக லாகோர் கல்லூரியின் ஆய்வுச் சஞ்சிகை
- உறுப்பினர், பேச்சு மொழியை பாடசாலைகளிலும் தேசிய பரீட்சை முறைகளிலும் சேர்த்துக்கொள்ளும் ஆலோசனை சபை, கல்வி அமைச்சு

**கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல - சிரேஷ்ட விரிவுரையாளர்**

- பிரதான பேச்சாளர் - இலங்கை ஆங்கில எழுத்தாக்கம் மீதான மாநாடு, கௌஹாத்தி பல்கலைக்கழகம், அஸாம், இந்தியா
- கைப்பிரதி மீளாய்வாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் Vistas ஆய்வுச் சஞ்சிகை, மானிடவியல் மற்றும் சமூகவியல்
- பிரதியாக்க ஆசிரியர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் Vistas ஆய்வுச் சஞ்சிகை, மானிடவியல் மற்றும் சமூகவியல்
- இறுதிச்சுற்றின் நடுவர் - 2012 தேசிய இலக்கிய பரிசளிப்பு – ஆங்கில நாவல்கள்
- இலங்கையில் ஆங்கில எழுத்துக்களுக்கான கிரேஷியன் பரிசு – 2012 க்கான நடுவர், இதுவே இலங்கையில் ஆங்கில எழுத்துக்கு வழங்கப்படும் மிக முக்கிய பரிசு
- கிரேஷியன் பரிசை மேற்பார்வை செய்யும் கிரேஷியன் நம்பிக்கை பொறுப்புச் சபையின் உறுப்பினர்
- பிரதி மீளாய்வாளர், பேராதனை பல்கலைக்கழகம், பிரசுரிக்கும் மானுடவியலுக்கான இலங்கை ஆய்வு சஞ்சிகை
- இலங்கை Candle Aid எனும் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனத்தின் ஆங்கிலத் தொடர்பாடல் திறன் நிகழ்ச்சித் திட்டத்தின் இணை பணிப்பாளர்
- கைப்பிரதி மீளாய்வாளர், இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் பிரசுரங்கள்

- வருகைதரு ஆய்வாளர், ஆங்கிலத்துறை கௌஹாத்தி பல்கலைக்கழகம், அஸாம், இந்தியா
- பொது ஆசிரியர், ஹொங்கொங் ஆங்கில இலக்கியத் தரவுத்தளம், ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் ஆங்கில பாடசாலையினால் நடத்தப்படுகிறது.
- கௌரவ ஆங்கில பேராசிரியர், ஆங்கிலப் பாடசாலை, ஹொங்கொங் பல்கலைக்கழகம் (கௌரவ பதவி)

**ஒத்துழைப்பும் பங்காண்மையும்**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆளணி அபிவிருத்தி நிலையத்தின் செயற்பாடுகளுக்கு PGIE ஒத்துழைப்பு வழங்குகிறது. அத்துடன், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மொழிகள் கற்கைகள் துறையின் கற்பித்தல் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றுக்கும் PGIE ஒத்தாசை வழங்குகிறது.

மொழிகள் கற்கைகள் துறையின் கல்விசார் பணியாளர்கள் PGIE யின் சகல செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். அவர்களது உதவி இல்லாமல் முதுமாணிப் பட்ட ஆய்வு மேற்பார்வை சாத்தியப்பட மாட்டாது. 2012 ஆம் ஆண்டு முழுவதும் உப வேந்தவர், மூதவை உறுப்பினர்கள், பிரதி உப வேந்தர், பதிவாளர், மானிடவியல் சமூகவிஞ்ஞான பீடம் மற்றும் கல்விப் பீடம் ஆகியவற்றின் பீடாதிபதிகள், நிதியாளர், நூலகர் மற்றும் நூலக ஊழியர்கள், நான்கு பீடங்களினதும் உதவிப் பதிவாளர்கள், CETME ஊழியர்கள் மற்றும் உபவேந்தரின் அலுவலக ஊழியர்கள் ஆகியோர் PGIE க்கு தொடர்ச்சியான உதவிகளை வழங்குகின்றனர். வருடாந்த அறிக்கைகள் மற்றும் COPE கோரிய ஆவணங்களின் மொழிபெயர்ப்புக்கு கல்விப் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.ரீ.தனராஜ் ஒத்துழைப்பு வழங்கினார்.

PGIE யின் 2013-17 முழுமையான திட்டத்தின் வரைவுக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தகைசார் பேராசிரியர் நாளனி ரத்னசிரி உதவி வழங்கினார்.

முதுமாணி நிகழ்ச்சித் திட்டத்தின் தனித்தனி கற்கை நெறிகளுக்குப் பின்வருவோர் வருகைதரு விரிவுரையாளர்களாக உதவினர்:

இலங்கை திறந்த பல்கலைக்கழக தகைசார் பேராசிரியர் ஆர்.றஹீம், இலங்கை திறந்த பல்கலைக்கழக மொழி கற்கைகள் துறையின் திருமதி பி.கே.பி.அபேசூரிய, கலாநிதி ராதிகா டி சில்வா, கலாநிதி வீ.வீ.மெதவத்தேகெதர, கலாநிதி டினாலி தேவேந்திரா, செல்வி எல்.கே.குமாரணதுங்க - முன்னாள் பணிப்பாளர் - தேசிய கல்வி நிறுவனத்தின் ஆங்கில கல்விக்கான உயர் நிறுவனம், கலாநிதி எம்.கே.எஸ்.ஐயர், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் ELT, ELTC யின் சிரேஷ்ட விரிவுரையாளர், திரு.எல்.டீ.ஐ.விஜேதுங்க, இலங்கை திறந்த பல்கலைக்கழக சமூக கற்கைகள் துறை, செல்வி டினாலி பெர்னாண்டோ, திரு.பாலித திசாநாயக்க, விரிவுரையாளர், கம்பஹா விக்கிரமாராச்சி நிறுவனம், திரு.ரீ.தனராஜ், இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்விப் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர், எமது முதுமாணி மாணவர்களான செல்வி எம்.ஐ.ஜான்ஸ் (சர்வதேச சுகாதார விஞ்ஞானங்கள் நிறுவகம்) செல்வி எஸ்.இலங்கக்கோன் (கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரும் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டுப் பணிகளுக்கு உதவினர்.

பின்வருவோர் வெளிவாரி ஆய்வுக்கட்டுரை மதிப்பீட்டாளர்களாக எமக்கு பணி புரிந்தனர்: பேராசிரியர் ஷிரோமி பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகைசார் பேராசிரியர், திருமதி வீ.யட்டவத்த, முன்னாள் பணிப்பாளர் தேசிய கல்வி நிறுவகம், பேராசிரியர் மாரி பெரேரா, கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடத்தின் பீடாதிபதி, கலாநிதி சீ.டீ.எஸ்.வெட்டவே, களனி பல்கலைக்கழகம், கலாநிதி எம்.கே.எஸ்.ஐயர், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ELT, ELTC சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் தலைவர்/ELTU, செல்வி டி.பெர்னாண்டோ, களனி பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆகியோர். அத்துடன், பின்வருவோர் எமது உள்வாரி பரீட்சகர்களாக உதவி புரிந்தனர்: பேராசிரியர் ஆர்.ரஹீம் (தகைசார் பேராசிரியர் / இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் PGIE யின் ஆரம்ப பணிப்பாளர்), கலாநிதி வீ.வீ.மெதவத்தேகெதர, கலாநிதி டீ.தேவேந்திரா, கலாநிதி ஆர்.டி சில்வா, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மொழிகள் கற்கைகள் துறை.

**வருகைதரு விரிவுரையாளர்கள்**

கனேடிய டொரன்டோ பல்கலைக்கழகத்தின் கல்விக் கற்கைகள் மீதான ஒன்டாரியோ நிறுவனத்தின் கலாநிதி பட்டப்படிப்பு மாணவர் செல்வி சிரீமாலி ஹேரத், 2012 நவம்பர் முதல் வருகைதரு விரிவுரையாளராக பணிபுரிகின்றார். அவர், தனது கலாநிதி ஆய்வினை மூன்று தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் முன் சேவை ஆங்கில ஆசிரியர்கள் மீது மேற்கொண்டுள்ளார். PGIE யில் இருந்த போது அவர் பாடத்திட்டம், கற்பித்தல் சாதனங்களை இற்றைப்படுத்த உதவியதோடு, கலைத்திட்டம் மற்றும் சாதன உருவாக்க கற்கை நெறியில் படிப்பித்தலையும் மேற்கொண்டார். ஆய்வு முறையில் குழுவில் உறுப்பினராக பணியாற்றியதோடு, பிரயோக மொழியியலில் புதிய ஆய்வு முறையினையும் அவர் அறிமுகப்படுத்தினார். அத்துடன், எமது மாணவர்களுக்கு ஆய்வு முன்மொழிகள், எடுத்து வைப்புக்களை மேற்கொள்ளவும் அவர் உதவினார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சகல கல்விசார், கல்விசாரா பணியாளர்கள், தேசிய, சர்வதேச பல்கலைக்கழகங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் எமக்களித்த உதவிகள், ஆதரவுகளுக்காக PGIE தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களது உதவி இல்லாமல் எம்மால் தொழிற்பட்டிருக்க முடியாது என்பதையும் பதிவு செய்கிறது. இந்த உதவிகளின் காரணமாகவே, பட்டப்பின் கற்கைகளில் எம்மால் தேசிய, சர்வதேச தராதரத்தினை பேணவும் முடிகிறது.

## 6. திருத்தப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் (புதிய படிவத்தின்படி)

### (அ) மீண்டெழும் செலவுகளின் விபரம்

| விடயம் | 2011 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|
| அ. தனிப்பட்ட வருமானங்கள் | 2,070,596.24 | 4,668,633.49 |
| ஆ. பயணம் | 41,511.00 | 35,257.60 |
| இ. வழங்கல்கள் | 369,530.57 | 474,141.08 |
| ஈ. பேணல் | 116,194.40 | 25,984.00 |
| உ. ஒப்பந்த சேவைகள் | 535,419.90 | 774,585.88 |
| ஊ. ஏனைய | 657,143.63 | 1,009,393.59 |
| **மொத்தம்** | **3,790,395.74** | **6,987,995.64** |

### (ஆ) மூலதனச் செலவுகளின் விபரம்

| விடயம் | 2011 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|
| அ. தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு | 140,292.60 | 1,051,982.00 |
| ஆ. இயந்திராதிகள் கொள்வனவு | - | - |
| இ. கட்டடம் மற்றும் கட்டமைவுகள் கொள்வனவு | - | - |
| ஈ. ஏனைய | 828,016.75 | 272,415.09 |
| **மொத்தம்** | **968,309.35** | **1,324,397.09** |

### (இ) நிதிசார் முன்னேற்ற விபரங்கள் (செலவினம்)

| விடயம் | 2012 வழங்கல் (ரூபா) | 2012 இல் செலவு (ரூபா) | சேமிப்பு / மிகை (ரூபா) |
|---|---|---|---|
| அ. மீண்டெழும் செலவு (செயற்றிட்டம் தவிர) | 10,442,000.00 | 6,987,995.64 | 3,454,004.36 |
| ஆ. மூலதனம் (செயற்றிட்டம் தவிர) | 500,000.00 | 1,324,397.09 | 281,690.65 |
| இ. செயற்றிட்டம் (உள்ளூர் நிதியீட்டம்) | - | - | - |
| ஈ. செயற்றிட்டம் (வெளிநாட்டு நிதியீட்டம்) | - | - | - |
| **மொத்தம்** | **7,405,000.00** | **8,312,392.00** | **2,646,294.91** |

**(ஈ) நிதிசார் முன்னேற்ற விபரங்கள் (பெறப்பட்ட வருமானம்)**

| **வருமான மூலம்** | **2012 ஏற்பாடு ரூபா** | **2012 சேர்ப்பு ரூபா** | **மிகை / துண்டு ரூபா** |
|---|---|---|---|
| அ. பட்டப்படிப்புகள் | - | - | - |
| ஆ. பட்டப்பின் படிப்புகள் | 1,077,000.00 | 1,931,787.00 | 854,787.00 |
| இ. நிபுணத்துவ ஆலோசனைகள் | - | - | - |
| ஈ. ஏனைய | 365,000.00 | 719,629.66 | 354,629.66 |
| **மொத்தம்** | **1,442,000.00** | **2,651,416.66** | **1,209,416.66** |

**(உ) நிதிசார் செயலாற்றுகை பகுப்பாய்வு - 2012**

| **விடயம்** | **சூத்திரம்** | **ஒரு மாணவனுக்கான செலவு ரூபா** |
|---|---|---|
| அ. மாணவனுக்கான மீண்டெழும் செலவு (RE) | RE/மாணவர் தொகை | 84,192.71 |
| ஆ. மாணவனுக்கான மூலதனச் செலவு (CE) | CE/மாணவர் தொகை | 15.956.59 |
| **மொத்தம்** | | **100,149.03** |

# 7. கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

## உள்ளக கணக்காய்வு அறிக்கை

மேற்படி வருடத்திற்குரிய கணக்காய்வு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் PGIE இன் முக்கிய விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது. அவை பின்வருமாறு:

**1. முன் கணக்காய்வுகள்**

- பல்கலைக்கழக சேமலாப நிதியை (UPF) விடுவித்தல்
- பணிக்கொடைகளை வழங்குதல்
- ஓய்வூதிய நிதியை விடுவித்தல்
- ஒப்பந்தங்களின் இறுதிக் கொடுப்பனவை வழங்குதல் மற்றும் தடுப்பு நிதியை விடுவித்தல்

**2. சரிபார்த்தல்**

31.12.2012 இல் பிரதான களஞ்சியசாலைகளின் வருடாந்த இருப்பைச் சரிபார்த்தல்

